# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

******

முறையீட்டு மனு எண். 48/ந/2017

ஆணை எண். 251/2017

நாள் : 2/11/2017

**திரு A. சோலைத்தேவர்,**
**பழநி** – முறையீட்டு மனுதாரர்

**திரு . எஸ். அப்பாவு,**
**மற்றும் மூவர்**
**பழநி.** – எதிர் மனுதாரர்கள்

திண்டுக்கல் மாவட்டம், பழநி, 24, வடக்கு ரதவீதியில் வசிக்கும் திரு A.சோலைத்தேவர் C/o. கிருஷ்ணன் அவர்களின் 11.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2017 அன்று பெறப்பட்டு 48/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழநி, 24, வடக்கு ரதவீதியில் வசிக்கும் திரு A.சோலைத்தேவர் என்பவர் பழநி நகராட்சிப் பகுதியில் உள்ள மறவர் மடம் என்ற பெயரில் உள்ள கட்டடத்திற்கு சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பினை எதிர்மனுதாரர்கள் பெயரில் மாற்றம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இக்கட்டடம் மீதான உரிமை குறித்து சென்னை நிலவரித்திட்ட ஆணையர் அலுவலகத்தில் விசாரணை நிலுவையில் உள்ள நிலையில், சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு

சம்பந்தமான மாற்றம் செய்வதை ஆட்சேபித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரர் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு மனுதாரருக்கு 11.05.2017 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு ஆணையிடப்பட்டது. உடல்நிலை சரியில்லாத நிலையில் முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட நாளில் விசாரணைக்கு வருகை தரவில்லை. எனினும், மேற்குறிப்பிட்ட மறவர் மடம் சொத்து சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பின் நகல்கள் மற்றும் 1912–ஆம் ஆண்டிலிருந்து நடப்பு ஆண்டு வரை பழநி நகராட்சியில் சொத்துவரி மற்றும் குடிநீர் வரிகளை செலுத்திபதற்கான சில ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து, நகராட்சி ஆணையரின் அறிக்கையும் பெறப்பட்டது. 20.07.2017 நாளிட்ட நகராட்சி ஆணையரின் அறிக்கையில் வார்டு –1 ல், சொத்துவரி விதிப்பு எண்களிட்ட,755,756/1, 756/2 வரிவிதிப்புகள் நகராட்சி சொத்து வரி கேட்பு பதிவேட்டின்படி மறவர் மடம் என்ற பெயரில் உள்ளதென்றும், சொத்துவரி பெயர் மாற்றம் தொடர்பாக எவ்வித மனுவும் இன்றைய நாள்வரை நிலுவையில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கு ரத வீதியில், 1,2,3,3A,5 மற்றும் 5/3 கதவு எண்களிட்ட கட்டடத்திற்கு மறவர் மடம் பெயரிலேயே சொத்துவரி உள்ளதையும் நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

4. இந்நேர்வு சம்பந்தப்பட்ட மறவர் மடம் கட்டடத்திற்கு சொத்து வரி நகராட்சியில் செலுத்தியதற்கான இரசீதுகளை முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்துள்ளார். அவற்றில் 1912–ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சொத்துவரி இரசீதும் அடங்கும். எனவே, மறவர் மடம் என்ற கட்டடம் 1912–ஆம் ஆண்டிலிருந்து இருந்துவருவதாக தெரியவருகிறது. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 13123/2010 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினையும் 2/2010 மற்றும் 2870/2016 எண்களிட்ட பல்பொருள் சார்ந்த மேல்முறையீட்டு மனுக்களையும் தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட மனுக்கள் சம்பந்தப்பட்ட வழக்கில் 25.10.2016 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கட்டடம் குறித்து முறையீட்டு மனுதாரரின் மேல்முறையீடு சென்னை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட அலுவலகத்தில் ந.க. எ1/14846/2010 எண்ணிட்ட கோப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளதாக தெரிகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள 12713/2017 எண்ணிட்ட நீதிப்பேராணை மனு மற்றும் 9824/2017 முதல் 9826/2017 முடிய எண்களிட்ட நீதிப்பேராணை பல்வகை மனுக்களில் 10.07.2017 அன்று வழங்கப்பட்ட

தீர்ப்பில் பெயர்மாற்றம் ஏதும் நகராட்சி செய்யக்கூடா என்பதற்கு தடையாணையும் எதிர்மனுதாரர்கள் வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தில் எவ்வித தடங்கள் மற்றும் வில்லங்கம் ஏற்படுத்தக் கூடாது என்பதற்கும் சொத்துவரி, குடிநீர் இணைப்பு கட்டணம் மற்றும் மின் இணைப்பு சம்பந்தமான பெயர் மாற்றம் எதுவும் செய்யக்கூடாது என்பதற்கும் உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரியவருகிறது. நீதிமன்றத்திலும் நில அளவை மற்றும் நில வரி திட்ட அலுவலகத்திலும் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் பழனி மண்டல துணை வட்டாச்சியர் 23.12.2016 அன்று எதிர் மனுதாரர்கள் பேரில் கூட்டாகப் பட்டா தாக்கல் செய்ய உத்திரவு இட்டுள்ளார். சென்னை நில அளவை மற்றும் நிலவரி திட்ட அலுவலகத்திலும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் இந்நேர்வு சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் எவ்வித ஆணையும் இடாமல் இத்துடன் முடித்துக் கொள்ள முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டிடத்திற்கு 2016–2017–ஆம் ஆண்டிற்கான சொத்துவரி மறவர் மடம் என்ற பெயரிலேயே செலுத்தப் பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பழநி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 2–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1) ஏ. சோலைத்தேவர்,
24, வடக்கு ரதவீதி,
பழநி, திண்டுக்கல் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
பழநி, திண்டுக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்